பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 147 நாள் : 04.11.2016

**பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 6 மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு 07.11.2016 முதல் 12.11.2016 வரை வைட்டமின்–ஏ திரவம் வழங்கும் முகாம்**

---------

ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இயல்பான வளர்ச்சி, அறிவுசார் வளர்ச்சி மற்றும் உடல் வளர்ச்சிக்கும் தேவையான ஒரு நுண்ணூட்டு சத்தாக வைட்டமின்–ஏ விளங்குகிறது. வைட்டமின்–ஏ திரவம் வழங்குவதன் மூலம் பார்வையின்மை தடுக்கப்படுகிறது. தேசிய வைட்டமின்–ஏ குறைபாடு கட்டுப்பாடு திட்டம் முதன்முதலில் 1970ல் 7 மாநிலங்களில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 1975ம் ஆண்டு இந்தியா முழுவதும் வைட்டமின்–ஏ குறைபாடு கட்டுப்பாடு திட்டம் விரிவாக்கப்பட்டது. குழந்தைகளின் கல்லீரலில் சேமித்து வைக்கப்பட்ட வைட்டமின்–ஏ நுண்ணூட்டு சத்து நான்கு மாதங்களில் குறைய ஆரம்பித்து ஆறு மாதங்களில் மிகவும் குறைந்து விடுகிறது. எனவே, வைட்டமின்–ஏ நுண்ணூட்டு சத்து 6 மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வருடத்திற்கு இரண்டு முறை கொடுப்பது அவசியமாகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் அனைத்து சென்னை ஆரம்ப சுகாதார மையங்களிலும், சென்னை மகப்பேறு மருத்துவமனைகளிலும் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களிலும் 07.11.2016 முதல் 12.11.2016 வரை (காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை) ஆறு நாட்களுக்கு 6 மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வைட்டமின்–ஏ திரவ மருந்தை வாய்வழியாக கொடுக்கும் மருத்துவ முகாம் நடத்தப்பட உள்ளது.

இம்முகாமில், பொதுமக்கள் அனைவரும் தங்கள் வீட்டிற்கு அருகாமையில் உள்ள சென்னை ஆரம்ப சுகாதார மையங்கள், சென்னை மகப்பேறு மருத்துவமனைகள் அல்லது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களில் தங்களின் 6 மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வைட்டமின்–ஏ திரவ மருந்தை வாய்வழியாக கொடுத்து பயன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்
பெருநகர சென்னை மாநகராட்சி